# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 235/2016

ஆணை எண். 33/2017

நாள் : 24/03/2017

திரு. அரவிந்த் சுப்பிரமணியம்,
திருநெல்வேலி – 627 009.

– முறையீட்டு மனுதாரர்

திரு கோ. அரியநாதன்,
வட்டத்துணை ஆய்வாளர்,
திருநெல்வேலி.

– எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாநகராட்சி, கொக்கிரகுளம், 23, வசந்த் நகர் விரிவாக்கப் பகுதியில் வசிக்கும் திரு அரவிந்த் சுப்பிரமணியம் அவர்களது 21.03.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.03.2016 அன்று பெறப்பட்டு 235/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக எதிர் மனுதாரரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருநெல்வேலி மாநகராட்சி, கொக்கிரகுளம், 23, வசந்த் நகர் விரிவாக்கப் பகுதியில் வசிக்கும் திரு அரவிந்த் சுப்பிரமணியம், திருநெல்வேலி மாநகராட்சியில் மாநகர சார் ஆய்வாளராகப் பணியாற்றிய திரு கோ. அரியநாதன் மற்றும் நில அளவைப் பணியாளர்கள் மீது கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

(i) முறையீட்டு மனுதாரருக்குச் சொந்தமான புலஎண்.1286/2க்கு உரிய நகர நிலஅளவை வரைபடம் வழங்க மறுத்தது ;

(ii) முறையீட்டு மனுதாரரின் நிலத்தை நில அளவை செய்து நிலஅளவை வரைபடத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளாதது;

(iii) நகர நில அளவை எண்.1286/2 நிலத்திற்குச் செல்லும் சாலையை குறிக்கத் தவறியது ;

(iv) 28.09.2015 நாளிட்ட தனது முறையீட்டு மனு சம்பந்தமாக எதிர்மனுதாரர் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியது.

2. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக, எதிர்மனுதாரரின் அறிக்கையினைப் பெற்று தச்சநல்லூர் மண்டல உதவி ஆணையர் தனது 13.04.2016 நாளிட்ட கடித எண்.டி.பி.1–5002–2016–ல் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார். நகர நில அளவை எண்.1286/2 சம்பந்தமான நிலஅளவை வரைபடம்15.07.2015 அன்று முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்டது என்றும் ஆனால் அவ்வரைபடம் 29.09.2007–ல் வழங்கப்பட்ட வரைபடத்திற்கு இணையாக இல்லை என மனுதாரர் தெரிவித்ததின்பேரில் 2007–ல் நடைமுறையில் இருந்த வரைபடம் தற்போது இல்லை என்றும் மேற்படி பழைய வரைபடத்திற்கு இணையான மெட்ரிக் அளவைப்படி தயார் செய்யப்பட்ட வரைபடம் வழங்கப்பட்டது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். 1923–ஆம் வருடத்திய பழைய நகர நிலஅளவை ஆவணங்களின்படி நகர நிலஅளவை எண்.1286/2ல் உள்ள பதிவு செய்யப்பட்ட பரப்பு 1365 சதுர அடி என்றும், பத்திரப்பதிவில் குறிப்பிட்டுள்ள 4 செண்ட் பரப்பினைக் குறிப்பிட்டு நகர நில அளவைப் பதிவேட்டில் திருத்தம் செய்ய இயலாது என மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரிவிக்கப்பட்ட கடிதத்தின் நகலையும் சமர்ப்பித்துள்ளார். மேலும் நகர நில அளவை எண்.1286/2 புலத்திற்கு செல்லும் பாதை குறித்து நகர நில அளவை வரைபட பதிவேட்டில் பதிவு எதுவும் செய்யப்படவில்லை என்றும், நகர அளவை வரைபட பதிவேட்டில் பாதையைக் குறிப்பிட்டு புதிதாகப் பதிவு செய்யப்பட வேண்டுமானால், பாதை செல்லும் இடத்தை மாநகராட்சிக்கு தானமாக வழங்கி, பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்தால் நிலஅளவை வரைபடத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள இயலும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 14.06.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 29.06.2015 நாளிட்ட தனது மனுவில் 1286/2 மற்றும் 1284/1 புல எண்கள் கொண்ட நிலத்தின் வரைபடத்தைக் கோரியதாகவும், எதிர்மனுதாரர் கோரிய கையூட்டுப் பணத்தை வழங்காததால் புல எண்.1286/2 க்கான வரைபடத்தை காணாமல் ஆக்கிவிட்டார் என்று விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், 29.09.2007 அன்று மாநகராட்சி ஆணையர் கையொப்பமிட்டு வழங்கிய சரியான வரைபடத்தை காட்டியும் அதை எதிர்மனுதாரர் ஏற்க மறுத்துவிட்டார் என்றும் தெரிவித்துள்ளார். தனது நிலம் சம்பந்தமான அளவுகள் நகர நிலஅளவை பதிவேட்டில் தவறாக இருப்பதைச் சுட்டி காட்டித் தவறுகளை திருத்தம் செய்ய, 25.07.2015 நாளிட்ட கடிதத்தில் கோரியதாகவும், நகர நில அளவை பதிவேட்டில் பதிவு செய்துள்ள 3.13 செண்ட் பரப்பினை திருத்தம் செய்ய கணிசமான தொகையை கையூட்டாக வழங்கவேண்டும் என்று எதிர்மனுதாரர் மீண்டும் கோரியதாகவும் தெரிவித்தார். நில அளவை எண்கள் 1286/2 மற்றும் 1284/1 உள்ள நிலத்திற்கு புலத்தில் பாதை இருந்தும், பாதை இல்லை என்று குறிப்பிட்டு எதிர்மனுதாரர் தனக்கு பதில் அளித்ததாகத் தெரிவித்து, பதிவுத்துறை மூலம் பெறப்பட்ட வில்லங்கச் சான்றிதழின் நகலினையும் விசாரணையின்போது சமர்ப்பித்தார். மேலும், எதிர்மனுதாரர் கோரிய கையூட்டுப் பணத்தை வழங்காததாலேயே தன்னை அலைக்கழிப்பதாக முறையீட்டு மனுதாரர் தெரிவித்தார்.

4. விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்டு அவரது அறிக்கை கோரப்பட்டது. எதிர்மனுதாரரும் தனது அறிக்கையில், மாநகராட்சி நகர அளவை பராமரிப்பு பணிகளுக்காக தனக்கு வழங்கப்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களிலிருந்து வார்டு–1, பிளாக்–17, நகர அளவைப் படத்திலிருந்து நகர அளவை எண்கள் 1280/1, 1281,1282,1283/3, 1284/1288 ஆகியவற்றின் வரைபட நகல்கள் தயார் செய்யப்பட்டு ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்டது என்றும் ஆனால் முறையீட்டு மனுதாரர் அதை ஏற்க மறுத்தார் எனக் குறிப்பிட்டுள்ளார். வரைபட நகலை பெற்றுக்கொண்ட மனுதாரர் அதில் திருப்தி அடையாமல் தமக்கு வழங்கப்பட்ட வரைபடம் தவறானது என நேரில் தெரிவித்தார் என்றும்

அதற்கு நடைமுறையில் இருந்து வரும் வரைபடத்தின் நகல்களே வழங்கப்பட்டன எனவும் முறையீட்டு மனுதாரர் அதனை ஏற்றுக்கொண்டதாக தெரியவில்லை என்றும் தெரிவித்துள்ளார். பின்னர் 2007–ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வரைபடத்தின் நகல் ஒன்றினை அனுப்பி அது போன்ற வரைபடம் வழங்கக் கோரி முறையீட்டு மனுதாரர் விண்ணப்பித்திருந்தார் என்றும் தற்போது நடைமுறையில் இல்லாத வரைபடங்களின் நகல்களை வழங்க இயலாது என முறையீட்டு மனுதாரருக்கு தெரிவித்ததாகவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் தன்மீது ஆதாரமற்ற புகாரை தெரிவித்துள்ளதாகவும் அரசால் வழங்கப்பட்டுள்ள வரைபடங்களில் திருத்தங்கள் செய்வதற்கும், மாற்றி அமைப்பதற்கும் நகர சார் ஆய்வாளராகிய தனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும், நகர அளவை எண்.1286/2–ன் பரப்பளவு 3.13 செண்ட் என்பது சரியான அளவு என்றும் தவறாக எழுதப்பட்டது அல்ல என்ற விவரமும் முறையீட்டு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். நகர அளவை எண்.1286/2–க்கு செல்லும் பாதை நடைமுறையில் இருந்து வருகிறது என்றும், எனினும் நகர அளவை ஆவணங்களில் அப்பாதை பதிவு செய்யப்படவில்லை என்றும் பாதையை புதிதாக நகர அளவை ஆவணங்களில் பதிவு செய்ய வேண்டுமானால், மேற்படி பாதையின் இடத்தை திருநெல்வேலி மாநகராட்சிக்கு தானமாக எழுதிக்கொடுத்த ஆவண நகலுடன் இணைத்து திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு மனு செய்து கொண்டால் பரிசீலித்து சம்பந்தப்பட்ட நகல்கள் மற்றும் டோப்போ வரைபடம் ஆகியவை வழங்கப்படும் என்ற விபரமும் முறையீட்டு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்ட வரைபடங்கள் மற்றும் தகவல்கள் அனைத்தும் தற்போது நடைமுறையில் பராமரிக்கப்பட்டுவரும் ஆவணங்களின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டது என்றும் அவற்றில் மாற்றங்கள், திருத்தங்கள் எவையேனும் பதிவு செய்யப்பட வேண்டுமானால், முறையீட்டு மனுதாரர் உரிய ஆவணங்களை வருவாய்த்துறை உயர் அதிகாரிகளுக்கு சமர்ப்பித்து, வருவாய்த் துறை வழங்கும் ஆணையின் அடிப்படையிலேயே திருத்தங்கள் மேற்கொள்ள இயலும் என்றும், மாறாக முறையீட்டு மனுதாரர் விருப்பத்திற்கு ஏற்ப வரைபடங்கள் மற்றும் ஆவணங்களில் திருத்தங்கள் மேற்கொண்டு நகல்கள் வழங்குவதற்கு தனக்கு அதிகாரம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

5. எதிர்மனுதாரர் திரு கோ. அரியநாதன் அவர்களிடம், 10.11.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவரது வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது தனது அறிக்கையில் சமர்ப்பித்த விவரங்களை உறுதி செய்ததுடன் அது சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலக ஆவண நகல்களையும் சமர்ப்பித்தார்.

6. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர், தனக்குச் சொந்தமான புல எண்.1286/2–க்கு சரியான வரைபடம் வழங்காதது, அந்நிலத்தின் அளவினை குறைத்து குறிப்பிட்டதுடன் அப்புலத்திற்கான பாதையை வரைபடத்தில் குறிப்பிடாதது குறித்து எதிர்மனுதாரரான நில அளவை வட்டத் துணை ஆய்வாளர் திரு கோ. அரியநாதன் மீது புகார் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். எதிர்மனுதாரர் திரு கோ. அரியநாதன் தனக்கு வழங்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலேயே முறையீட்டு மனுதாரர் கோரிய ஆவண நகல்கள் வழங்கப்பட்டன என்று தெரிவித்து மேற்குறிப்பிட்ட புலம் சம்பந்தமான வருவாய் ஆவண நகல்களை திருநெல்வேலி வட்டாட்சியரிடம் ஒப்பம் பெற்றும் அனுப்பியுள்ளார். கையூட்டு கோரியதாக முறையீட்டு மனுதாரர் தெரிவித்த குற்றச்சாட்டினையும் எதிர்மனுதாரர் மறுத்துள்ளார். நிலஅளவை ஆவணத்தில், மேற்குறிப்பிட்ட புல எண்.1286/2–ன் பரப்பு 1365 சதுர அடி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நில அளவை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நில அளவைக்கு மாறாக பத்திரப்பதிவு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரப்பினை நிலஅளவை ஆவணத்தில் பதிவு செய்ய இயலாது. மேலும், அப்புலத்திற்குச் செல்லும் பாதை திட்ட அனுமதி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின், அப்பாதை செல்லும் நிலத்தினை உட்பிரிவு செய்து

தானமாக மாநகராட்சிக்கு வழங்கினால் மட்டுமே, அப்பாதை குறித்து நில அளவை வரைபடத்தில் குறிப்பிட இயலும். இது குறித்து எதிர்மனுதாரர் முறையீட்டு மனுதாரருக்கு உரிய விளக்கம் அளித்திருந்தால் முறையீட்டு மனுதாரர் இக்குற்றச்சாட்டுகளை தெரிவித்திருக்கமாட்டார். பொதுவாக பொதுமக்களுடன் நேரடி தொடர்பில் இருக்கும் அரசு அலுவலர்கள், தங்களைத் தேடிவரும் பொதுமக்களுக்கு உரிய வழிகாட்டுதல்களைத் தெரிவிப்பதில்லை. பொதுமக்களை அலைக்கழிப்பதாலும், சரியான தகவல்களை தரமறுப்பதன் காரணத்தாலேயே இதுபோன்ற புகார்கள் வருகின்றன. பொதுமக்களும் தாங்கள் அலைக்கழிக்கப்படுவதை பொறுக்க இயலாமல் கையூட்டு கோருதல் போன்ற புகார்களை அரசு அலுவலர்கள் மீது தெரிவிக்கின்றனர். இந்நேர்வில் முறையீட்டு மனுதாரருக்கு உரிய வழிகாட்டுதல்களை தெரிவிப்பதற்கு மாநகராட்சி நில அளவைத் துறை தவறியுள்ளது என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே, முறையீட்டு மனுதாரர் மீண்டும் மாநகராட்சி நில அளவைத் துறையை அணுகினால் உரிய வழிகாட்டுதல்களை வழங்கி, அவரது குறைகளைக் களைவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2017–ஆம்** ஆண்டு, மார்ச் திங்கள், **24–ஆம்** நாள், என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/4/2017
**செயலாளர்.**
6.4.17
6/4/17

பெறுநர்

1. **திரு. அரவிந்த் சுப்ரமணியன்,**
   **23, வசந்த் நகர் விரிவு,**
   **கொக்கிரகுளம், திருநெல்வேலி – 627 009.**

2. **திரு. கோ. அரியநாதன்,**
   **வட்டத் துணை ஆய்வாளர்**
   **(நில அளவைத் துறை),**
   **வட்டாட்சியர் அலுவலகம்,**
   **திருநெல்வேலி – 627 001.**
   **(மாநகராட்சி ஆணையாளர் மூலமாக)**

3. **மாநகராட்சி ஆணையாளர்,**
   **திருநெல்வேலி மாநகராட்சி,**
   **திருநெல்வேலி – 627 001.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்